மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

# மாதாந்த மதிப்பீடு

| தரம் - 09 | புவியியல் | யூலை – 2022 |
| --- | --- | --- |

## பகுதி I

1. உலகின் மிகப் பெரிய கண்டமாக அமைவது
   01) வடஅமெரிக்கா 02) அவுஸ்திரேலியா
   03) தென் அமெரிக்கா 04) ஆசியா

2. ஐரோப்பாவும் ஆசியாவும் ஒன்றாகச் சேர்த்து அழைக்கப்படும் நிலத்திணிவு
   01) யுரேசியா 02) ஆசியா
   03) ஐரோப்பா 04) எகேசியா

3. பின்வருவனவற்றுள் ஆசியாக்கண்டத்திற்குரித்தான தீவாக அமைவது.
   01) ஜப்பான் தீவு 02) கரீபியன் தீவு
   03) ஐஸ்லாந்து 04) நியூசிலாந்து

4. ஆசியாக்கண்டத்தின் மொத்த நிலப்பரப்பாகக் காணப்படுவது.
   01) 44.6 மில்லியன் சதுர கிலோ மீற்றர்
   02) 4.46 மில்லியன் சதுர கிலோ மீற்றர்
   03) 446 மில்லியன் சதுர கிலோ மீற்றர்
   04) 445 மில்லியன் சதுர கிலோ மீற்றர்

5. உலகின் மிகப் பெரிய மலைத்தொடராக அமைவது
   01) ரொக்கிமலை 02) அந்தீஸ்மலை
   03) இமயமலை 04) அற்லஸ்மலை

6. உலகின் மிக உயர்ந்த மலைச்சிகரமாக காணப்படுவது.
   01) கிளிமாஞ்சரோ 02) மகாலு
   03) அன்னபூர்ணா 04) எவரஸ்ற்

7. கடல்மட்டத்தினைவிட மிகத்தாழ்வாக அமைந்துள்ள கடல்
   01) கஸ்பியன் கடல் 02) சாக்கடல்
   03) ஏரல்கடல் 04) கருங்கடல்

8. உலகிலே அதிகமான மழைவீழ்ச்சியை பெறும் இடம்
   01) சிறாப்புஞ்சி 02) கோபி
   03) ஐகோபாத் 04) வர்கோயேன்ஸ்க்

9. உலகில் மொத்த சனத்தொகையில் 60% வாழும் கண்டம்.
   01) ஐரோப்பா 02) அவுஸ்திரேலியா
   03) ஆசியா 04) தென் அமெரிக்கா

10. ஆசியாவில் அமைந்துள்ள சுதந்திர நாடுகளின் எண்ணிக்கை
    01) 54 நாடுகள் 02) 53 நாடுகள்
    03) 52 நாடுகள் 04) 65 நாடுகள்



kalvi.lk

11. உலகின் காணப்படும் மிக உயரமான மேட்டுநிலமாகக் காணப்படுவது.
- 01) தக்கண மேட்டுநிலம்
- 02) சைபீரிய மேட்டுநிலம்
- 03) திபெத் மேட்டுநிலம்
- 04) ஹற்றன் மேட்டுநிலம்

12. உலகின் முகடு என அழைக்கப்படுவது
- 01) கண்டி மேட்டுநிலம்
- 02) திபெத் மேட்டுநிலம்
- 03) சைபீரிய மேட்டுநிலம்
- 04) அரேபியன் மேட்டுநிலம்

13. ஏரல் கடலைச் சென்றடையும் நதிகள் எவை?
- 01) யூப்பிரட்டீஸ், தைக்கிறிஸ்
- 02) சர்டேரியா, அமுடேரியா
- 03) கங்கைநதி, அமுர் நதி
- 04) ஓப் நதி, ஜெப்சி நதி

14. உலகில் மிக ஆழமான நன்னீர் ஏரியாக அமைவது.
- 01) பைக்கால் ஏரி
- 02) ஐம்பெரும் ஏரி
- 03) அயர் ஏரி
- 04) லடோகா ஏரி

15. அயனப் பருவக்காற்று காலநிலை நிலவும் நாடுகள்
- 01) ஜாவா, சுமாத்திரா
- 02) வடகிழக்கு இந்தியா, பங்களாதேஸ்
- 03) இந்தியா, இலங்கை, மியன்மார்
- 04) கிழக்குச் சீனா, ஜப்பான் தீவு

16. மஞ்சள் நதி என அழைக்கப்படும் நதி?
- 01) சிந்து நதி
- 02) அமூர் நதி
- 03) குவாங்கோ நதி
- 04) கங்கை நதி

17. யூப்பிரட்டீஸ் தைக்கிறிஸ் நதிகள் பாயும் நாடுகள்
- 01) ஈரான்
- 02) ஈராக்
- 03) சவுதி அரேபியா
- 04) இந்தியா

18. பதப்படுத்தாத பருத்தியை உலக சந்தைக்கு வழங்கும் நாடு
- 01) பங்களாதேஸ்
- 02) இந்தியா
- 03) பாகிஸ்தான்
- 04) சீனா

19. உலகில் 3 வது பாரிய பொருளாதாரத்தை கொண்ட நாடாக அமைவது.
- 01) சீனா
- 02) பிரான்ஸ்
- 03) ஜப்பான்
- 04) இந்தியா

20. ஆசியாவின் மொத்த சனத்தொகையாக அமைவது.
- 01) 3.36 பில்லியன்
- 02) 4.46 பில்லியன்
- 03) 7.90 பில்லியன்
- 04) 4.46 பில்லியன்

(20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி II

முதலாம் வினா உட்பட எல்லாமாக 5 வினாக்களுக்கு விடை தருக.

1. பின்வரும் இடங்களை ஆசியப்படத்தில் குறித்துப் பெயரிடுக.

- 01) இந்து நதி
- 02) குவாங்கோ நதி
- 03) ஏரல் நதி
- 04) கஸ்பியன் கடல்
- 05) இமயமலைத் தொடர்
- 06) சிங்கப்பூர்
- 07) தக்கண மேட்டுநிலம்
- 08) ஈரான் மேட்டுநிலம்
- 09) அரபிக்கடல்
- 10) மஞ்சள் கடல்
- 11) ஆப்கானிஸ்தான்
- 12) யூரல்மலைத் தொடர்

(12 x 1 = 12 புள்ளிகள்)



kalvi.lk

2.

01) ஆசியாக்கண்டத்தின் தனி அமைவினை வரையறை செய்க
02) ஆசியாக்கண்டத்தின் பிரதான எல்லைகள் நான்கினையும் தருக.
03) ஆசியாக் கண்டத்தின் பௌதீக மற்றும் மானிட அடிப்படையிலான சிறப்பம்சங்கள் 5 தருக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

3.

01) இலங்கையின் நீள அகலத்தை கிலோமீற்றரில் தருக.
02) ஆசியாக்கண்டத்தின் பிரதான எல்லைகள் நான்கினையும் அவற்றின் நீளங்களையும் கிலோமீற்றரில் தருக.
03) ஆசியாவில் மொங்கோலோயிட் இன மக்கள் வாழும் 5 நாடுகளைத் தருக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

4.

01) உலகின் 3பிரதான காலநிலை வலயங்களைப் பெயரிடுக.
02) மேலே(வினா1) இல் குறிப்பிட்ட காலநிலை வலயத்தில் நாம் வாழும் காலநிலை வலயத்திற்குரிய 4 காலநிலை வகைகளை குறிப்பிடுக.
03) இலங்கையின் மிகக்கடுமையான காலநிலை நிலைமைகளைக் கொண்ட விசேடமான இடங்கள் இரண்டினை விளக்குக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

5.

01) பிரதான காலநிலை வகைக்கேற்ப இயற்கைத் தாவர வகைகள் பெயரிடுக.
02) கடுங்குளிர் வலயத்திற்குரிய தாவரவகையினுடைய இயல்புகள் நான்கு தருக.
03) கடுங்குளிர்வலய தாவரச்சூழலில் வாழும் ஐந்து விலங்கினங்களை பெயரிடுக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

6.

01) பின்வரும் நாடுகளுக்குப் பொருத்தமான பொருளாதார நடவடிக்கைகளைப் பெயரிடுக.
    a. பாகிஸ்தான் :
    b. யப்பான்
    c. டுபாய்
02) காரிப், ராபி எனும் பயிரிடும் பருவங்களுக்குரிய காலங்களையும் பயிர்களையும் பெயரிடுக.
03) சேவைக் கைத்தொழில்கள் ஐந்து தருக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

7.

01) சனத்தொகையில் சமனற்ற பரம்பலின் மீது செல்வாக்குச் செலுத்தும் மூன்று பௌதிக காரணிகளை தருக.
02) ஆசியாவில் அதிக சனத்தொகை கொண்ட நாடுகளில் முதல் நான்கு நாடுகளையும் தருக.
03) ஆசியாவில் சனத்தொகை குறைந்த 5 பகுதிகளை தருக.

(3+4+5 = 12 புள்ளிகள்)



kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT,  B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**
**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page